## 2. தமிழக வரலாற்றுச் சான்றுகள்

வரலாற்றுச் சான்றுகள் என்பவைகள் மக்கள் விட்டுச் சென்ற "தடயங்களாகும்". இவைகள் தொல்பொருள் சான்றுகள் இலக்கியச் சான்றுகள் என்று இரண்டு வகைப்படும். இந்த இருவகைச் சான்றுகளும் தமிழ்நாட்டு வரலாற்றை அறிந்து கொள்ளப் பெரிதும் உதவுகின்றன. அவைகளைப் பற்றி விரிவாகக் காண்போம்.

## 2.1 தொல்பொருள் சான்றுகள்

தொல்பொருள் சான்றுகள் மிகவும் பழமையான பொருள் ஆகும். அவைகள் புதைப் பொருள் ஆராய்ச்சிப் பொருட்கள், அரண்மனைகள், கோயில்கள், செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்று பல வகைப்படும்.

தமிழ் நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சியின் முன்னோடியாக விளங்கியவர் "புரூஸ்டர்" என்பவராவர். இவரின் தலைமையில் செயல்பட்ட ஆய்வுக்குழு ஒன்று செங்கல்பட்டு மாவட்டம் அச்சிரப்பாக்கம் என்ற ஊரில் புதை பொருள் ஆய்வை மேற்கொண்டது. பழங்கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்கால கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி, "மண்ணியல்" துறையைச் சார்ந்த பேராசிரியர்கள் அம்மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளில் அமைந்துள்ள தேரி எனப்படும் செம்மண் மேடுகளில் ஆய்வு மேற்கொண்ட போது கற்கால மனிதர்கள் பயன்படுத்திய மிகக் கூர்மையான கல்லாயுதங்களைக் கண்டுபிடித்தனர். இக்கருவிகள் அக்குலியன் என்னும் தொழில்நுட்ப வகையைச் சார்ந்தது ஆகும். இவ்வாய்வுகளின் பயனாக தமிழகத்தின் வரலாறு இரண்டரை லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிய முடிந்தது.

ஆய்வாளர் எஸ்.ஆர்.ராவ் என்பவர் தலைமையில் வடஆற்காடு மாவட்டம் பையம்பள்ளியில் நடத்தப்பட்ட புதைபொருள் ஆய்வில் கற்கால, உலோக கால கருவிகள் பல கண்டுபிடிக்கப்பட்டன. விலை மதிப்பற்ற ஆபரணக் கற்கள், சுடுமண் விளக்குகள், வளையல்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக கற்கால, உலோக கால கட்டங்களில் தமிழகத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. தொல்லியல் துறை சார்ந்த ஆய்வறிஞர்களால் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளில் அரிக்கமேடு மற்றும் ஆதிச்சநல்லூர் ஆய்வுகள் மிக முக்கயமானவை ஆகும்.

## 2.2 கோயில்கள்:

கோயில்களும் தமிழ்நாட்டு வரலாற்றைத் தெரிவிக்கும் சான்றுகளாக உள்ளன. ஆனை மலை, அழகர் மலையில் இருக்கும் குகை கோயில்கள், சமணர்கள் சங்க காலத்தில் தங்கியிருந்ததைக் குறிப்பிடுகின்றது. அது போலவே சமணமதம் பிரவியிருந்ததையும் இந்த கோயில்கள் வெளிப்படுத்துகின்றன.

கழுகுமலையில் உள்ள "வெட்டுவான்" கோயில், சாளுக்கிய பாதிப்பை தமிழ் கலையில் சுட்டிக்காட்டுகிறது. முதலாம் இராஜ இராஜனின் தஞ்சை பிரகதீஸ்வாரர் கோயில், ஒரு கோயிலின் பல உறுப்புக்கள் அதிஷ்டானம், பிட்டி, சுவர், கண்டம் போன்றவைகளை தெளிவாக அறிந்து கொள்ள உதவுகிறது. மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கோபுர வளர்ச்சி வரலாற்றை பற்றி அறிய உதவுகிறது.

## 2.3 செப்புப் பட்டயங்கள்: (Copper Plates)

செப்புப் பட்டயங்கள் மன்னர்கள் தங்களது ஆணைகளை எழுதி வெளியிட்ட சான்றுகளாகும். இவைகள் தமிழ்நாட்டின் அரசு, சமூகம், பண்பாடு பற்றி அறிந்து கொள்ள சிறப்பாக உதவுகின்றது.

### (1) வேள்விக்குடிச் செப்பேடுகள்

இது மதுரையை ஆண்ட முற்காலப் பாண்டிய மன்னர் நெடுஞ்சடைநன் பராந்தகன் (கி.பி. 765-815) வெளியிட்டதாகும். இந்த செப்பேடு சங்ககாலத்து செய்தி ஒன்றை நமக்குச் சொல்கிறது. சங்க காலத்தில் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னர் வேள்விக்குடி என்ற கிராமத்தை பிராமணருக்கு தானமாக அளித்தார் என்று குறிப்பிடுகிறது.

இதற்குப் பிறகு "கலியரசர்கள்" என்னும் களப்பிரர்கள் இந்த தானத்தை அபகரித்து விட்டனர். ஆகையால் அதை தங்களுக்கு மீண்டும் கொடுக்க வேண்டும் என்று அந்த பிராமணர்களின் வாரிசுகள் அரசனை கேட்டதாக இந்த செப்பேடுகள் சொல்லுகிறது. இந்த செப்பேடுகள் மூலம் பாண்டிய அரசர்கள் சங்காலத்தில் பிராமணர்களை ஆதரித்தார்கள் என்று அறிகிறோம். நெடுஞ்சடைநன் பராந்தக மன்னர் காலத்தில்தான் மீண்டும் பிராமணர்களை ஆதரிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றும் அறிய முடிகிறது.

### (2) பள்ளங்கோயில் செப்பேடுகள் (கி.பி. 540-556)

இந்த செப்பேட்டை வெளியிட்டவர், பல்லவ மன்னர் "மூன்றாம் சிம்மவர்மன்" (கி.பி. 540-556) ஆவார். பள்ளங்கோயில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளது. இந்த

பட்டயம் பல்லவ மன்னர்கள் ஆரம்பத்தில் சமண மதத்தை ஆதரித்தார்கள் என்று தெரிவிக்கிறது.

**(3) லெய்டன் செப்பேடுகள்**

இந்த செப்பேடு முதலாம் இராச இராச சோழ மன்னரால் (கி.பி. 985-1012) வெளியிடப்பட்டதாகும். இந்த செப்பேடு சிதம்பரம் கோயிலை முதலாம் பராந்தக சோழ மன்னர் தங்கத்தால் அலங்கரித்தார் என்று கூறுகிறது. மேலும் அரசரின் அதிகாரிகள் "நிலக்கிழார்களாக" இருந்தார்கள் என்று கூறுகிறது.

## 2.4 கல்வெட்டுகள்

இது மன்னர் கிராமச் சபைகள் மற்றும் சில தனி நபர்கள் செய்த நன் கொடைகளின் விபரமாகும். இவைகள் மலைக்குகைகள், கோயில்களில் காணப்படுகின்றன. இந்த கல்வெட்டுக்கள் மூன்று வகைப்படும். அவைகள் பிரமிக் கல்வெட்டுக்கள், வட்டெழுத்து கல்வெட்டுக்கள், தமிழ் கல்வெட்டுக்கள் ஆகும்.

**(1) தளவனூர் தமிழ்கல்வெட்டு:**

இந்த கல்வெட்டு தென் ஆற்காடு மாவட்டம் செஞ்சி தாலூகா தளவனூர் ஊரில் உள்ளது. இவை பல்லவ மன்னர் முதலாம் மமேந்திரவர்மன் வெளியிட்டார். இது முதலாம் மகேந்திரவர்மன், சிவன்கோயில் ஒன்றை கட்டியதை குறிப்பிடுகிறது.

**(2) மானூர் கல்வெட்டு : (வட்டெழுத்து கல்வெட்டு)**

இது வரலாற்று ஆசிரியர்கள் அடிக்கடிச் சுட்டிக்காட்டும் கல்வெட்டு ஆகும். இது கி.பி. எட்டாம் நூற்றாண்டு முற்கால பாண்டியர்கள் காலத்து கல்வெட்டாகும். இந்த

கல்வெட்டு, பிராமணர்களின் கிராம சபையில், உறுப்பினர் ஆவதற்கு வேண்டிய தகுதிகளைப் பற்றி குறிப்பிடுகிறது. இந்த கல்வெட்டு பிராமணர்கள் எல்லோருமே சபை உறுப்பினர் ஆக முடியாது என்று சொல்கிறது. அதற்கு மந்திரங்களை நன்றாக படித்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது.

**(3) உத்தர மேரூர் கல்வெட்டுக்கள்:**

இது வரலாற்று ஆசிரிரிய்கள் அடிக்கடிக் குறிப்பிடும் கல்வெட்டு ஆகும். இது செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது. சோழ மன்னர் முதலாம் பராந்தகன் காலத்தில் (கி.ப. 907-955) வெளியிடப்பட்டது. இது வரலாற்று சிறப்புமிக்க "கிராம தல ஆட்சி" பற்றி குறிப்பிடுகிறது. இந்த கல்வெட்டுக்கள் பிராமணர்கள் வாழும் கிராமத்து நிலம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்று கூறுகிறது. ஒவ்வொரு நில பிரிவும் ஒரு "குடும்பு" என்றழைக்கப்பட்டது. இதிலிருந்து தான் கிராமத்து சபைக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று கூறுகிறது.

**(4) ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டுக்கள்:**

ஸ்ரீரங்கம் கோயில் கல்வெட்டுக்கள் திருச்சியில் உள்ள ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலில் காணப்படுபவைகளாகும். இதில் பிற்காலப் பாண்டிய மன்னர்கள், முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன், இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன்ட, வீரபாண்டியன் போன்றவர்கள் வெளியிட்ட கல்வெட்டுகக்ள் உள்ளன. இந்த கல்வெட்டுக்கள் ஸ்ரீரங்கநாத சுவாமி கோயிலின் நிர்வாக சீர்திருத்தம் பற்றி குறிப்பிடுகின்றன.

## நாணயங்கள்

இந்தோ ___ ரோம வர்த்தகம் பற்றிக் கூறும் கோவை. சேலம், அரிக்க மேடு, உறையூர், புகார், மாமல்லபுரம் முதலிய இடங்களில் கிடைத்த அகஸ்டஸ் சீசரீ கால ரோமபுரி தங்க, வெள்ளிக் காசுகள், தஞ்சை மாவட்டத்தில் கிடைகத்த சீனக் காசுகள், மாமல்லபுரத்தில் கிடைத்த பல்லவர் செப்புக் காசுகள், சோழர் கால பொன், வெள்ளி நாணயங்கள், பாண்டிய, விஜயநகர, நாயக்க மற்றும் முஸ்லீம் ஆட்சியாளர் நாணயங்கள் ஆகியவற்றின் மூலம் மன்னர்களின் பெயர்கள், அவர்களது விருதுப் பெயர்கள், ஆட்சிக்காலம், பொருளாதார நிலைமை ஆகியன பற்றி அறிய முடிகிறது.

## நினைவுச் சின்னங்கள்

சங்க காலத் தமிழர்களால் கட்டப்பட்ட கட்டடங்கள், கோயில்கள், வாழிடங்கள் ஆகியன நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் பல்லவர் கால கோயில்கள், ஒற்றைக் கல் ரதங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் ஆகியன திருப்பரங்குன்றம், மண்டகப்பட்டு, மதேந்திரவாடி, மாமல்லபுரம், காஞ்சிபுரம் ஆகிய ஊர்களில் கிடைத்துள்ளன. சித்தன்னவாசல் ஓவியங்கள், காஞ்சிபுரம் கைலாச நாதர் ஓவியங்கள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

ராசராசேசுவரம் எனும் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், கங்கை கொண்ட சோழீக்சுரம் கோயில், நார்த்தாமலைக் கோயில், கொடும்பாளூர் மூவர் கோயில் ஆகியன சோழர் பற்றியும், நாயக்கர்களின் திருமலை நாயக்கர் மகால், விஜயநகர கோட்டைகள், மராட்டியர் கோட்டைகள், சிற்றரசர்களும், ஐரோப்பியரும் கட்டிய பல அரண்மனைகள் ஆகியன கி.பி. 10 ஆம் நூற்றாண்டு முதல் 19-ஆம் நூற்றாண்டு வரையிலான வரலாற்றை நிர்மாணிக்க உதவுகின்றன.

இவை தவிர பிரிட்டிஷ் அரசின் ஆவணங்கள், கடிதங்கள், நாட்குறிப்பேடுகள், காங்கிரஸ் கட்சியின் ஆவணங்கள், ஆட்சி முறை அறிக்கைகள், மாவட்ட விவரச் சுவடிகள், பத்திரகைகள், செய்தித்தாள்கள் ஆகியன தமிழக வரலாற்றை எழுத பெரிதும் உதவுகின்றன.